# பொதுக்காலத்தின் பத்தாம் ஞாயிறு

## மூன்றாவது திருவழிபாடு ஆண்டு

**இன்றைய வாசகங்கள்:**

**1அரசர்கள் 17:17-24, கலாத்தியர1: 11-19, லூக்கா 7:11-17**

## திருப்பலி முன்னுரை:

வாழ்வுக்குரியவர்களே, பொதுக்காலத்தின் பத்தாம் ஞாயிறு திருப்பலியை சிறப்பிக்க உங்களை அன்போடு அழைக்கிறோம். ஆண்டவரின் உயிரளிக்கும் ஆற்றலை உணர்ந்துகொள்ள இன்றைய திரு வழிபாடு நமக்கு அழைப்பு விடுக்கிறது. துன்பத்தில் இருப்போர் மீது பரிவு காட்டும் இறைவனாக நம் ஆண்டவர் இருக்கிறார் என்பதை உணர்ந்து வாழ அழைக்கப்படுகிறோம். நயீன் நகர கைம்பெண்ணின் மகனை இயேசு உயிரோடு எழுப்பிய நிகழ்வை இன்றைய நற்செய்தியில் நாம் காண்கிறோம். "கடவுள் தம் மக்களைத் தேடி வந்தார்" என்பதை பிறருக்கு அறிவிக்க நாம் தூண்டுதல் பெறுமாறு செபிப்போம். உயிர் தரும் ஆண்டவரின் வல்லமையால் நம் வாழ்வின் துன்பங்கள் விலக வேண்டி, இத்திருப்பலியில் பங்கேற்போம்.

# விசுவாசிகள் மன்றாட்டுகள்:

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

**1. என்றும் வாழ்பவராம் இறைவா,**

உலகெங்கும் பரவியுள்ள உமது திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும், இறைமக்களை வாழ்வின் உண்மை நெறியில் வளர்த்தெடுக்க தேவையான அருளைப் பொழியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

**2. புலம்பலைக் களிநடனமாக மாற்றிவிடும் தந்தையே இறைவா!**

வாழ்க்கையின் பல்வேறு பிரச்சனைகளாலும் தாக்கப்பட்டு வேதனையோடும், அழுகையோடும், அங்கலாய்ப்போடும் வாழ்ந்து கொண்டிருக்கும் அனைவர்மீதும் மனமிரங்கி, மகிழ்ச்சி நிறைந்த வாழ்வை அவர்களுக்கு அளித்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**3. புகலிடம் அருள்பவராம் இறைவா,**

உமது திருச்சபையில் நிகழும் வல்ல செயல்கள் மூலம், எம் நாட்டு மக்கள் அனைவரும் உம்மை தங்கள் கடவுளாக ஏற்றுக்கொள்ளவும், விண்ணகத்தை அடையாளப்படுத்தும் புக லிடமாக திருச்சபையைக் காணவும் தூண்டுதல் அளிக்குமாறு உம்மை மன்றாடுகிறோம்.

**4. பரிவு காட்டுபவராம் இறைவா,**

தங்கள் பாவங்களுக்கு பரிகாரமாகவும், உமது மாட்சி வெளிப்படும் வகையிலும் உடல், உள்ள வேதனைகளை அனுபவிக்கும் மக்கள் அனைவரும், மகிழ்ச்சிநிறை புதுவாழ்வை கண்டுணர துணைபுரியுமாறு வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**5. எம் கடவுளாகிய தந்தையே இறைவா!**

எமது இளைஞர்கள் அனைவரும் உம் திருமகனும், எங்கள் ஆண்டவருமாகிய இயேசுவைத் தங்கள் முன்னுதாரணமாகக் கொண்டு வாழ்வதற்கு வேண்டிய நல்லுள்ளத்தை அவர்களுக்கு அளித்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.